**டிசம்பர் – 25**

# TNPSC துளிகள்

- இந்திய மகளிர் கிரிக்கெட் வீராங்கனை ஸ்மிருதி மந்தனா மகளிர் சர்வதேச 20-20 (T20I) கிரிக்கெட் போட்டியில் 4,000 ரன்களுக்கு மேல் அடித்த முதல் இந்தியப் பெண்மணி என்ற பெருமையைப் பெற்றுள்ளார்.
- கர்நாடகாவின் கார்வாரில் உள்ள அஞ்சதிப் தீவின் நினைவாக 'அஞ்சதிப்' என்று பெயரிடப் பட்ட ஆழமற்ற நீர்நிலைகளில் இயங்கும் மூன்றாவது நீர்மூழ்கி எதிர்ப்புப் போர்க் கப்பலானது (ASW SWC) சென்னையில் இந்தியக் கடற்படையிடம் வழங்கப் பட்டது.
- காஷிவாசகி-கரிவா அணுமின் நிலையத்தை சுமார் 20 ஆண்டுகளுக்குப் பிறகு மீண்டும் தொடங்க ஜப்பான் ஒப்புதல் அளித்துள்ளது.
- இந்தியக் கடற்படையில் அதன் வகுப்பின் முன்னணி நீர்மூழ்கிக் கப்பலான INS சிந்துகோஷ், 40 ஆண்டு கால சேவைக்குப் பிறகு படையிலிருந்து நீக்கப் பட்டது.
- இந்திய உச்ச நீதிமன்ற வழக்கறிஞரான சுபம் அவஸ்தி, 2025 ஆம் ஆண்டிற்கான 40 வயதிற்குட்பட்ட 40 முன்னணி வழக்கறிஞர் விருதைப் பெற்றார்.
- M.V. MSC மைக்கேலா கப்பலானது தூத்துக்குடியில் உள்ள வ.உ. சிதம்பரனார் (VOC) துறைமுகத்தில் நிறுத்தப்பட்டுள்ளதுடன், அந்தத் துறைமுகத்தில் நிறுத்தக்கூடிய மிக அதிக கொள்கலன் சுமந்து செல்லும் திறன் கொண்ட மிகவும் நீளமான கொள்கலன் கப்பலாக மாறியது.
- சென்னையைச் சேர்ந்த ஃபோட்டோனிக்ஸ் ஒடிஸி என்ற இந்தியக் குழுவானது, நாசாவின் 2025 ஆம் ஆண்டு சர்வதேச விண்வெளிச் செயலிகள் சவாலில் மிகவும் உத்வேகம் கொண்ட குழு விருதை வென்றது.
    - இந்தியாவின் தொலைதூரப் பகுதிகளில் விரிவலை சேவை அணுகலை விரிவுபடுத்துவதற்காக மேம்பட்ட கட்டம் சார்ந்த செயற்கைக்கோள் இணைய அமைப்பை இக்குழு முன்மொழிந்தது.
- 1957 ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட மஞ்சருபா நாடகக் குழுவின் ஸ்தாபன உறுப்பினரான மூத்த அசாமிய நடிகை ரஞ்சனா சர்மா போர்டோலோய், அவரது 80 வது வயதில் திப்ருகரில் காலமானார்.
    - அவர் கலை மற்றும் கலாச்சாரத்திற்கான தனது பங்களிப்புக்காக பிஷ்ணு ரபா விருதைப் பெற்றார்.
- ஓமன் மத்திய வங்கியால் வெளியிடப்பட்ட, பலபடிச் சேர்மம் கொண்டு தயாரிக்கப் பட்ட அதன் முதல் ஒரு ரியால் பணத் தாளினை ஓமன் அறிமுகப்படுத்தியுள்ளது.
    - பலபடிச் சேர்மம் கொண்டு தயாரிக்கப்பட்ட பணத் தாள்கள் பாரம்பரியப் பருத்தி அடிப்படையிலான பணத் தாள்களை விட நீடித்து உழைக்கும் மற்றும் நீண்ட ஆயுட் காலம் கொண்டவையாகும்.


# தமிழ்நாட்டுச் செய்திகள்

## தமிழ்நாட்டில் காப்புரிமை தாக்கல்கள்

- 2024–25 ஆம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலத்தில் 15,440 காப்புரிமை விண்ணப்பங்கள் தாக்கல் செய்யப் பட்டுள்ளன.
- இந்தக் காலக்கட்டத்தில் காப்புரிமைத் தாக்கல்களில் அனைத்து இந்திய


மாநிலங்களிலும் தமிழகம் முதலிடத்தில் இருந்தது.

- இந்தியாவில் தாக்கல் செய்யப்பட்ட மொத்த 68,201 காப்புரிமை விண்ணப்பங்களில் தமிழ்நாடு 23% பங்கினைக் கொண்டுள்ளது.
- 2023–24 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது தமிழக மாநிலத்தில் தாக்கல் செய்யப்பட காப்புரிமை எண்ணிக்கை 62% அதிகரித்துள்ளன.
- விண்ணப்பங்களின் எண்ணிக்கை 9,565 (2023–24) என்ற எண்ணிக்கையிலிருந்து 15,440 (2024–25) ஆக உயர்ந்துள்ளது.




# தேசியச் செய்திகள்

## ஆரோவில் அறக்கட்டளை




- ஆரோவில் அறக்கட்டளைக்கு தேசிய முக்கியத்துவம் வாய்ந்த நிறுவனம் (INI) என்ற அந்தஸ்து வழங்க பாராளுமன்ற நிலைக்குழு பரிந்துரைத்துள்ளது.
- புதுச்சேரியில் அமைந்துள்ள ஆரோவில் அறக்கட்டளை, 1988 ஆம் ஆண்டு ஆரோவில் அறக்கட்டளை சட்டத்தின் கீழ் நிறுவப்பட்டது.
- இந்த அந்தஸ்தினைப் பரிந்துரைத்தக் குழுவின் தலைவர் திக்விஜய் சிங் ஆவார்.

- 1966 ஆம் ஆண்டு முதல் யுனெஸ்கோ பல தீர்மானங்கள் மூலம் ஆரோவில் அறக் கட்டளையை ஆதரித்து வருகிறது.
- இந்த அறக்கட்டளை இந்திய அரசின் கல்வி அமைச்சகத்தின் கீழ் செயல்படுகிறது.

## பல வழிப்பாதை கொண்ட தடுப்பிலா போக்குவரத்து சுங்கக் கட்டண முறை




- 2026 ஆம் ஆண்டின் இறுதிக்குள் இந்தியா முழுவதும் பல வழிப்பாதை கொண்ட தடுப்பிலா போக்குவரத்து சுங்கக் கட்டண முறையை (MLFF) செயல்படுத்த மத்திய அரசு திட்டமிட்டுள்ளது.
- வாகனங்கள் நிறுத்தாமல் சுங்கச்சாவடிகளைக் கடக்க அனுமதிக்கும் இந்த முறையின் மூலம், காத்திருப்பு நேரம் பூஜ்ஜிய நிமிடங்களாகக் குறையும்.
- இதனால் வாகனங்கள் மணிக்கு 80 கிமீ வேகத்தில் சுங்கச்சாவடிகளைக் கடக்க முடியும்.
- MLFF செயற்கை நுண்ணறிவு (AI) அடிப்படையிலான எண் தகடு அங்கீகாரம், செயற்கைக் கோள் கண்காணிப்பு மற்றும் FASTag ஒருங்கிணைப்பு அமைப்பைப் பயன்படுத்தும்.
- இந்த முன்னெடுப்பு ஆனது, போக்குவரத்து இயக்கத்தினை மேம்படுத்துதல், எரிபொருள் பயன்பாட்டைக் குறைத்தல் மற்றும் சுங்க வசூலில் வெளிப்படைத் தன்மையை அதிகரிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

## NSSH திட்டம்

- தேசியப் பட்டியலிடப்பட்ட சாதியினர் மற்றும் பட்டியலிடப்பட்ட பழங்குடியினர் மைய

(NSSH) திட்டம் ஆனது குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில்துறை நிறுவனங்கள் (MSME) அமைச்சகத்தினால் செயல்படுத்தப்படுகிறது.

- இந்தத் திட்டம் பட்டியலிடப்பட்ட சாதியினர் (SC) மற்றும் பட்டியலிடப்பட்ட பழங்குடியினர் (ST) சமூகங்களிடையே தொழில்முனைவினை ஊக்குவிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இது தேசிய சிறு தொழில்துறைகள் கழகம் லிமிடெட் (NSIC) மூலம் செயல்படுத்தப் படுகிறது.
- இந்தத் திட்டம் திறன் மேம்பாடு, நிதி உதவி மற்றும் சந்தை அணுகல் மூலம் SC/ST தொழில்முனைவோரை ஆதரிக்கிறது.
- பொதுக் கொள்முதல் கொள்கையின் கீழ், அரசாங்க கொள்முதல்களில் 4% ஆனது SC/ST சமூகத்தினருக்குச் சொந்தமான நிறுவனங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது.
- இந்தத் திட்டம் SC/ST தொழில்முனைவோர் அரசாங்க இணையச் சந்தை (GeM) மூலம் அரசாங்க ஒப்பந்தங்களில் பங்கேற்க உதவுகிறது.




# சர்வதேசச் செய்திகள்

## டிரம்ப் ரக போர்க்கப்பல்கள்



Trump Unveils New Battleship Class; Proposed USS Defiant Will Be Largest U.S. Surface Combatant Since WWII

- அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப், அமெரிக்க கடற்படைக்கு புதிய "டிரம்ப் ரக"

போர்க்கப்பல்களை உருவாக்கும் திட்டத்தை அறிவித்தார்.

- இந்தத் திட்டத்தின் முதல் கட்டத்தில் இரண்டு டிரம்ப் ரக போர்க்கப்பல்களைக் கட்டமைப்பதும் அடங்கும்.
- இந்தக் கப்பல்கள் சுமார் 30,000 முதல் 40,000 டன் எடையுள்ளதாக இருக்கும் என்று எதிர்பார்க்கப் படுகிறது.
- இந்தக் கப்பல்களில் எறிகணைகள், கனரகத் துப்பாக்கிகள், லேசர்கள் மற்றும் அதி மீயொலி எறிகணைகளைக் கொண்டிருக்கும்.
- பொதுவாக அதிபர்கள் பதவியில் இருந்து விலகிய பின்னரே அமெரிக்க கடற்படைக் கப்பல்களுக்கு அவர்களின் பெயரிடப்படும்.

## இந்தியா - நியூசிலாந்து FTA




- இந்தியா மற்றும் நியூசிலாந்து ஆகிய நாடுகள் விரிவான தடையற்ற வர்த்தக ஒப்பந்தத்திற்கான (FTA) பேச்சுவார்த்தைகளை நிறைவு செய்துள்ளன.
- இந்த ஒப்பந்தம் ஆனது, இரு நாடுகளுக்கும் இடையேயான இருதரப்பு வர்த்தகம், முதலீடு மற்றும் பொருளாதார ஒத்துழைப்பை வலுப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்த FTA ஒப்பந்தத்தின் கீழ், இந்தியாவிற்கு மேற்கொள்ளப்படும் நியூசிலாந்தின் ஏற்றுமதியில் சுமார் 95% மீதான வரிகள் குறைக்கப்படும் அல்லது நீக்கப்படும்.
- அடுத்த ஐந்து ஆண்டுகளுக்குள் இருதரப்பு வர்த்தகம் இரட்டிப்பாகும் என்று இரு நாடுகளும் எதிர்பார்க்கின்றன.

- அடுத்த 15 ஆண்டுகளில் நியூசிலாந்து நாடானது, இந்தியாவில் சுமார் 20 பில்லியன் அமெரிக்க டாலர்களை முதலீடு செய்யும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.
- இந்த ஒப்பந்தம் ஆனது சமீபத்திய ஆண்டுகளில் கையெழுத்தான இந்தியாவின் ஏழாவது தடையற்ற வர்த்தக ஒப்பந்தமாகும்.
- இது இந்தியாவின் மிகவும் வேகமாக முடிவடைந்த தடையற்ற வர்த்தக ஒப்பந்தங்களில் ஒன்றாகும்.

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## அதிமீயொலி எறிகணை அமைப்பு - டார்க் ஈகிள்




- டார்க் ஈகிள் என்பது அமெரிக்காவால் உருவாக்கப்பட்ட ஓர் மீயொலி எறிகணை அமைப்பு ஆகும்.
- இது அமெரிக்க இராணுவத்தினால் பயன்படுத்தப்படும் அணுசக்தி சாராத, நிலப் பரப்பில் இருந்து ஏவப்படும் ஆயுதம் ஆகும்.
- இந்த அமைப்பு ஆனது நீண்ட தூரத் தாக்குதல் வரம்பு கொண்ட அதி மீயொலி வேகத்திலான ஆயுதம் (LRHW) என்றும் அழைக்கப்படுகிறது.
- இது 2,735 கிலோமீட்டர் தொலைவில் உள்ள இலக்குகளைத் தாக்கும் திறன் கொண்டது.
- இது ஓர் அதி மீயொலி வேகத்திலான இழைவியக்க ஆயுதத்தினை (Common Hypersonic Glide Body- C-HGB) பயன்படுத்துகிறது என்பதோடு இது மேக் 17 வரையிலான வேகத்தில் பயணிக்கக் கூடியது.

- இந்த எறிகணையானது திட எரிபொருள், இரண்டு-நிலை கொண்ட ராக்கெட் உந்திகளைப் பயன்படுத்தி ஏவப் படுகிறது.

## பிரம்மோஸ் எறிகணை ஏற்றுமதி ஒப்பந்தங்கள்

- இந்தியாவின் பிரம்மோஸ் மீயொலி சீர்வேக எறிகணைகள் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப் படுகின்றன.
- தோராயமாக 450 மில்லியன் டாலர் மதிப்புள்ள ஏற்றுமதி ஒப்பந்தங்கள் விரைவில் கையெழுத்தாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.
- இந்த எறிகணையை நிலம், கடல் அல்லது வான் வழித் தளங்களில் இருந்து ஏவ முடியும்.
- பாகிஸ்தானுக்கு எதிரான சிந்தூர் நடவடிக்கையில், 15 முதல் 19 ஏவுகணைகள் ஏவப் பட்டதுடன் பிரம்மோஸ் எறிகணைகள் பயன்படுத்தப்பட்டன.
- இந்தியா சமீபத்தில், பிரம்மோஸ் ஏற்றுமதிக்காக இரண்டு நாடுகளுடன் சுமார் 4,000 கோடி ரூபாய் மதிப்பிலான ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டது.





# சுற்றுச்சூழல் செய்திகள்

## சென்னையில் காற்றின் தரம்

- பல இந்திய நகரங்களுடன் ஒப்பிடும்போது சென்னையில் PM2.5 (நுண் துகள்கள்) அளவு குறைவாக இருந்தது.
- கொடுங்கையூர் நிலையத்தில் 40 μg/m$^3$ தரநிலையானது தேசிய தரநிலையை விடக் 12.6 μg/m$^3$ குறைவாகப் பதிவாகியது.
- இது 2024 ஆம் ஆண்டில் நாட்டிலேயே மிகக் குறைந்த ஆண்டு சராசரி PM2.5 அளவைப் பதிவு செய்தது.
- சென்னையில் பல பகுதிகளில் PM2.5 அளவு 20 μg/m$^3$ என்ற அளவிற்குக் கீழே பதிவாகி உள்ளது.
- PM10 (பெரிய தூசித் துகள்கள்) மாசுபாடு சென்னை மாநகரில் ஒரு பெரியச் சவாலாக உள்ளது.
- வேளச்சேரியில் PM10 அளவு 47 μg/m$^3$ ஆக பதிவாயுள்ளது என்பதோடு, இது 60 μg/m$^3$

என்ற தேசிய வரம்பிற்குள் உள்ளது.

- ❖ கடல் காற்று போன்ற கடலோர இயற்கை காரணிகள் சென்னையில் PM2.5 அளவைக் குறைக்க உதவின.
- ❖ PM10 என்பது சாலை தூசி, கட்டுமானச் செயல்பாடுகள் மற்றும் மண் மறுசீரமைப்பு ஆகியவற்றுடன் பெரும்பாலும் தொடர்புடைய கரடுமுரடான துகள்களைக் குறிக்கிறது.
- ❖ டெல்லி-என்சிஆர் பகுதி (தேசியத் தலைநகரப் பகுதி) PM10 மற்றும் PM2.5 இரண்டிற்கும் மிகவும் மாசுபட்ட இடங்களின் பட்டியலில் தொடர்ந்து ஆதிக்கம் செலுத்துகிறது என்பதோடு அங்கு பல நிலையங்களில் ஆண்டு PM10 அளவுகள் 250 µg/m³ என்பதைத் தாண்டிச் செல்கின்றன.




# விளையாட்டுச் செய்திகள்

## மாற்றுத் திறனாளிகளுக்கான ஆசிய இளையோர் விளையாட்டு போட்டிகள் 2025

- ❖ மாற்றுத் திறனாளிகளுக்கான ஐந்தாவது ஆசிய இளையோர் விளையாட்டு போட்டிகள் (2025) ஆனது ஐக்கிய அரபு அமீரகத்தின் (UAE) துபாயில் நடைபெற்றது.
- ❖ இந்தியா 36 தங்கம், 28 வெள்ளி மற்றும் 38 வெண்கலம் உட்பட 102 பதக்கங்களுடன் பதக்கப் பட்டியலில் ஏழாவது இடத்தைப் பிடித்தது.
- ❖ உஸ்பெகிஸ்தான் 197 பதக்கங்களுடன் முதலிடத்தைப் பிடித்தது என்ற நிலையில் ஈரான் இரண்டாவது இடத்தையும், ஜப்பான் மூன்றாவது இடத்தையும் பிடித்தன.


- இந்த விளையாட்டுப் போட்டிகளின் அதிகாரப்பூர்வ உருவச் சின்னம் அமீரகப் பாலைவன நரியின் வடிவினால் ஈர்க்கப்பட்ட "Foxy" என்பதாகும்.




| | COUNTRIES | GOLD | SILVER | BRONZE | TOTAL |
|---|---|---|---|---|---|
| 1 | UZBEKISTAN | 82 | 49 | 26 | 157 |
| 2 | I.R.IRAN | 59 | 71 | 72 | 202 |
| 3 | JAPAN | 39 | 24 | 12 | 75 |
| 4 | THAILAND | 21 | 25 | 27 | 73 |
| 5 | KAZAKHSTAN | 20 | 21 | 13 | 54 |
| 6 | INDONESIA | 16 | 22 | 10 | 48 |
| 7 | INDIA | 16 | 14 | 16 | 46 |
| 8 | REPUBLIC OF KOREA | 12 | 6 | 6 | 24 |
| 9 | PHILIPPINES | 11 | 10 | 5 | 26 |
| 10 | MALAYSIA | 10 | 12 | 7 | 29 |

# முக்கிய தினங்கள்

## தேசிய விவசாயிகள் தினம் 2025 - டிசம்பர் 23




- இந்த நாள் கிசான் திவாஸ் என்றும் அழைக்கப்படுகிறது.
- இது முன்னாள் இந்தியப் பிரதமர் சௌத்ரி சரண் சிங் அவர்களின் பிறந்தநாளைக் குறிக்கிறது.
- இந்த நாள் 2001 ஆம் ஆண்டில் இந்திய அரசால் அறிவிக்கப்பட்டது.

- இந்த நாள் விவசாயிகளை கௌரவிப்பதையும், உணவுப் பாதுகாப்பு மற்றும் பொருளாதாரத்தில் அவர்களின் பங்கை எடுத்துக் காட்டுவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- 2025 ஆம் ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "Vikasit Bharat 2047 – The Role of FPOs (Farmer Producer Organisations) in Globalising Indian Agriculture" என்பதாகும்.

## நல்லாட்சி தினம் 2025 - டிசம்பர் 25




- இது இந்தியாவின் முன்னாள் பிரதமர் அடல் பிஹாரி வாஜ்பாய் அவர்களின் (இந்தியாவின் முன்னாள் பிரதமர்) பிறந்தநாளைக் குறிக்கிறது.
- இந்த நாள் 2014 ஆம் ஆண்டில் இந்திய அரசால் அறிவிக்கப்பட்டது.
- வெளிப்படைத்தன்மை, பொறுப்புக்கூறல் மற்றும் திறம் மிக்க ஆளுகையை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- 2025 ஆம் ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "Prashasan Gaon Ki Ore" (Governance Towards Villages/கிராமங்களுக்கான ஆளுகை) என்பதாகும்.

# இதரச் செய்திகள்

## கன சதுர வடிவ மண்டை ஓடு – மெக்சிகோ

- மெக்சிகோவில் உள்ள பால்கன் டி மான்டெசுமா தளத்தில் தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் ஒரு கனசதுர வடிவ மனித மண்டை ஓட்டைக் கண்டெடுத்துள்ளனர்.
- இந்த மண்டை ஓடு ஆனது 1,000 ஆண்டுகளுக்கு முன்பு இடை அமெரிக்க பண்பாட்டுக் காலத்தில் (கி.பி 400–900) முன்பு வாழ்ந்த சுமார் 40 வயதுடைய ஒரு மனிதனுடையது ஆகும்.
- அறிவியல் பகுப்பாய்வு, மண்டை ஓட்டின் வடிவம் ஆனது குழந்தை பருவத்தில் வேண்டுமென்றே மேற்கொள்ளப்பட்ட மண்டை ஓடு சிதைவால் ஏற்பட்டது என்பதைக் காட்டுகிறது.
- மண்டை ஓடு வளரும்போது அதை மறுவடிவமைக்க தட்டுகள் மற்றும் கட்டுகளைப் பயன்படுத்தி மண்டை ஓடு சிதைவு மேற்கொள்ளப்பட்டுள்ளது.
- கனசதுர வடிவம் ஆனது இடை அமெரிக்க பிராந்தியத்தில் காணப்பட்ட ஓர் அரிய

மற்றும் இதற்கு முன்னர் பதிவாகாத பாணியாகும்.

- ❖ இந்த நடைமுறை ஹிஸ்பானிக் காலத்திற்கு முந்தைய சமூகங்களின் சமூக அடையாளம், சடங்கு நம்பிக்கைகள் மற்றும் கலாச்சார மரபுகளுடன் இணைக்கப்பட்டுள்ளது.




★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★